# முல்லை அமுதன்



JPL
C2617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

# விழுதுகள் மண்ணைத் தொடும்

(புதுக் கவிதைகள்)

நூலகம்
மாநகராட்சி மன்று
-3-4-1993
92149
யாழ்ப்பாணம்

முல்லை அமுதன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

காந்தளகம்

மறவன்புலவு
சாவகச்சேரி

834, அண்ணாசாலை
சென்னை 600 002

92149C.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் — விழுதுகள் மண்ணைத்தொடும்; உரிமை: — முல்லை அமுதன், இ. மகேந்திரன் அஞ்சல் பெட்டி 30041, ஜெத்தா, சவூதி அரேபியா; முதற்பதிப்பு: — திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி (1.6.1992); ஓவியர் — சந்திரஹாசன்; தயாரிப்பு — க. சச்சிதானந்தன் ஒளி அச்சுக்கோப்பு அச்சிடல் — காந்தளகம் 4, முதல்மாடி, 834 அண்ணாசாலை சென்னை 600 002
தொலைபேசி: 834505


| | |
|---|---|
| சேர்வு எண் | |
| வகுப்பெண் | 894-8111 |


விலை: இந்தியாவில் ரூ. 10.00
ஈழத்தில் ரூ. 35.00
பிறநாடுகளில் U.S. $ 3.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

KOHA
JPL

# காணிக்கை

ஈழத்து மண்ணில்
நின்று
போராடும்
என் இனிய
போராளிகட்கு

92149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8 M

ஆசிரியரின் பிறநூல்கள்:

★ நித்ய கல்யாணி
★ புதிய அடிமைகள்
★ விடியத்துடிக்கும் ராத்திரிகள்
★ யுத்தகாண்டம்
★ விமோசனம் நாளை! (அச்சில்)

நன்றிகள்:—

— எழுதத் தூண்டிய நண்பர்கள்
— அழகிய வடிவில் வெளியிடும் காந்தளகம் நண்பர்கள்
— என்னையும் எழுத்தையும் ஆதரிக்கும் தமிழ்மக்கள்
— என் வாசகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கவிதைகளும் நானும்:

கவிதைகள் அனுபவித்து உணரப்படல் வேண்டும். கவிதைக்குப் பின்னால் நிறங்கள் இருத்தல் கூடாது. மனித நேயம் இருந்தால் அது காலத்தை வென்று நிற்கும்.

வாழ்கின்ற மக்களுக்காக-அவர்களின் சோகங்களை - காயங்களை - எழுது தல் - உண்மைகளை உணர்ந்து எழுது தல் - காலச்செலவில் கவிஞன் கரைந்து விட மாட்டான்.

இது உணர்ந்த உண்மை.

அல்லல்படுகின்ற மக்களுடன் நின்று பெறுகின்ற அனுபவங்களைவிட, தூரத்து தரிசனம் தாக்கம் குறைவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், எங்கள் உடலில் ஓடுவதும் இரத்த உறவுதான். வலியும் இருக்கும். வலிமையும் இருக்கும்.

என்று எழுத்துலகில் தள்ளப்பட்டேனோ அன்று தொடங்கி இற்றை நாள் வரை - பேனாவின் கூர்மை வாளினைவிட வலிமை அதிகம் என்றுணரச்செய்த பெரியவர்கள், நண்பர்கள், உலக நாடுகளில் வாழ்கின்ற பேனா நண்பர்கள் இவர்களுக்கு நன்றிகள் என்றென்றும்.

இவை-விழுதுகள் மண்ணைத்தொடும் இவையே உங்களின் மனதுகளிலும் ஆழமாய் விழுதுகளைப் பரப்பும் எழுதுங்கள்-விமர்சனங்கள்.

அன்பன்:

முல்லை அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்காக நான்!



பூத்தன பனிப்பூக்கள்
சிவப்பாய்...வெள்ளையாய்
வெளிச்சம்
மெல்ல தலைகாட்ட
பனியும் பூக்களை
விவாகரத்து செய்தபடி...
பதுங்கு குழிக்குள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைகள் மூடமறுத்தால்
கனவும் பறந்து போகும்.
இதயம் அசைய மறுத்தால்
காதலும் பொய்த்துப் போகும்.

புன்னகை விரல்கள்
மெல்ல...
என்னைத் தொட்டுச் செல்லும்
காற்றுடன் குளிரும்...
வார்த்தை மறுக்கும்.

உன்னில்
இருக்குமட்டும்
விழிமீன்களுக்கு
உயிர்போகாது
என்னைப்போல...

எங்கள்
வீதியில்...திருவிழாப் பொழுதுகளில்
சைக்கிளில் நானும்...

இது என்ன
காதலர்களின் படைஎடுப்பா?
புடவைகளின் அணிவகுப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே!
எறிந்துவிடாதே
உன்
இதயம் தாங்குவது
என் நினைவுகளைத்தானே!

நீ—
இருந்தால்
தேசங்களையே திசைதிருப்பி விடலாம்!

உன்னைப் பார்த்தமுதலாய்
வாலிபம் உடைந்தது பார்!

ஷாஜகானின் காதல்
தாஜ்மகாலானது
எனது காதல்
கவிதையானது!

இனியும்—
தாமதம் எத்தனைநாள்களோ?
உனக்குத் தெரியாது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சமூக விதிகள் பற்றி..
காதலுக்குக் கல்லறைதான்
சமாதி..
அதை உடைப்போம் வா.

நீ வரும் வரை —
இங்கே காத்திருப்பேன்
என் கவிதைகளுடன்..!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு



சூழலின் வெக்கை
மனத்தையும்
எரிக்கும்...
ஜன்னலைத் திறந்து வைப்பேன்.
கைகள் என்னவோ
சினிமா இதழைப் புரட்டும்
கண்கள் மட்டும்
இரசித்தபடி...இரசித்தபடி...
குளித்து—

PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபம் நிதர்சனமாய் அவள்...
நனைந்த பாதங்களைத்
தரையில்
பதித்தபடி...பதித்தபடி...
பருவமும் தோற்கும் போங்கள்!
எத்தனைகாலம் தான்
இப்படி...
விழிகளால் உன்னைக்
கற்பழித்துக் கொண்டிருப்பது?

"புடவை காயவைக்கிறேன்
மாமி"
கீழ்ப் போஷனுக்குச் செய்தி
அனுப்புவாள்.
என்
மனத்தையும் காயவைப்பது
அவளுக்குத் தெரியுமோ?

"நாளை அந்தப்பெண்
கிராமத்திற்குப் போகிறாள்"
அக்கா சொன்னாள்.
"பாவம் மூத்த பெண்—
வீட்டுக்காய்—
எல்லாம் இழந்து நிற்கிறாள்"

நெஞ்சுள் ஏதோ,
கூராய் இறங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவள் மீண்டும்
வருவாளா?
கேள்வி மீண்டும்
எழுந்து...அடங்கும்.
இனி ஒரு
நிர்வாண தரிசனம்
நிகழவே கூடாது...
சுவர்களின் வெக்கை...
மன உளைச்சல்..
எனக்குள்ளே புதைபடும்.

புத்தனாகிவிட்டேனோ?
நாளைமுதல்—
இந்த ஜன்னல்கள்
நிரந்தரமாய்த்
திறக்காது!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள்



காலண்டரில்
திகதிக்காய்
கைபடும்போதுதான்
வயதும் —
ஞாபகத்திற்கு வருகிறது
எத்தனை
காலம்? நாள்களா?
ஜன்னலையே சிறைகளாக்கி —!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை —
பார்வைகள் விண்ணப்பித்திருக்கும்?
எல்லாம் —
நிராகரிக்கப்பட்டபோதுதான்
முதுமை
நெஞ்சைத் தொடும்

இப்போதெல்லாம் அப்பா
வரன்களைத் தேடுவதில்லை
களைத்துப்போய்விட்டோம்

பூக்களைச் சூடிக்கொள்ள
ஆசைப்பட்டபோதெல்லாம்...
செடிகளில் மலரவில்லை.
மலர்கள்
மலர்ந்தபோது
சூடிக்கொள்ள
கூந்தல் தயாராயில்லை
ஏதோ ஒன்றை
இழந்து
விதவையாய் நின்றன
நரைகள்
எங்களுள்
ஓர் சபதம்

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பங்களை
ஏற்பதில்லை என்று...
வில்லை வளைக்க
எவனும்
தயாராயில்லாததனால்
நாங்களே தயாரானோம்
வாழ்வும்
வில்லாய்
வளைந்துகொண்டது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்கூட..!



மெதுவாக—
உங்கள் சிறகுகளை
அசையுங்கள்
இங்கே—
இலைகள் இறந்துபோகலாம்.

அருகே வளர்ந்து
உறவு கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்பட்ட அந்தப்
புல்கூட
கழுத்தை நீட்டித்
தற்கொலைக்குத்
தயாரானது,
இரயிலைக் காணோம்.


அதோ பாருங்கள்
இதயத்தில் சிறைவைத்த
இத்தனை நட்சத்திரங்களையும்
யார்தான்
வானத்து வீதிகளில்
அறைந்து சென்றார்கள்?

இங்கே—
ஒரு இதயம் இரத்தத்தில்...
இனியாவது
காதலை வாழவிடுங்கள்
இல்லையெனில்
துப்பாக்கி முனையில்
காதல் கூட
தேசிய மயமாக்கப் படலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் சிறையில்



நிழல்களுக்குக்
குடை
பிடிக்கச் சொல்கிறாய்
அங்கே பார்
ஏழைச் சிறுவன்
தன் —
நிர்வாணம் மறைக்க
தேசியக்கொடியைப் பார்த்தபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தின் காயங்களை
மறந்துவிட்டு

மலர்களை இரசிக்கச் சொல்கிறாய்
உன்னால் முடிகிறதா
முயன்று பார்.

பார்த்துக்கொள்
கண்களை மூடியபடி
சட்டங்களும்
போதையில் தள்ளாடியபடி.

மனிதங்களைக்
கொளுத்திவிட்டு
எதற்காய்
யாகம் வளர்க்கின்றாய்?

நெஞ்சில் பூ வேலை செய்தாலும்
பூமியின் துயரங்கள்
என்னவோ
இன்னும் இருட்டில்தான்.

இருளின் சிறையில்
வாடும் மாதாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சத்துக்கு
இழுத்து வருவோம்.


கனவுகளை விவாகரத்து
செய்துவிட்டு
நிஜங்களுடன் கை கோர்ப்போம்
எங்கே
இளைஞர்களே
அணிசேருங்களேன்.

★

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருஷேத்திரப் போர்



இப்போதல்லாம்
கனவுகளே வருவதில்லை
தூங்கப்போனால்—
பொம்பர்கள்துப்பும்
மானிடம் அஃறிணைகளுடன்
அழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கம்வந்தால்தானே
கனவுகள் வருவதற்கு
எல்லாப் பொழுதுகளிலும்
எங்கள் கால்கள்
பதியும்
இந்த வன்னி மண்ணில்
சுதந்திரப் பூக்கள்
வெளிச்சம் காட்டும்
அவர்கள்—
வருகிறார்கள் வரட்டும்
தயாராய் நாங்களும்
தொடர்ந்த—
ஒரு யுத்தத்திற்கு... எங்கள் கால்கள்
நடக்கும்!
இந்தக் குருக்ஷேத்திரப்போரில்
தம்பிகளுடன்
கர்ணன்களும்
கைகோர்த்தபடி...

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீக்குளிக்கும் தேசம்



எதற்காய்
இந்தத்
தேசம் மீண்டும்
தீக்குளித்துக் கொண்டிருக்கிறது.

புயலின் தாக்கம்
மண்ணுக்குத் தெரியாததல்ல
புயலுடன் பூக்களும்
மோதிக் கொண்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியும்—
நிர்வாணமாய் வீழ்ந்து கிடந்தாள்.

ஆங்காங்கே
தீவைப்புகள், தீமிதிப்புகள்
இராமன் தொடங்கிவைத்தது
இவர்களால்
நடத்தப்படுகின்றது
அவ்வளவுதான்.


கொடிகள் தான்மாறின
அவர்கள்
இன்னும் ஒன்றே.

உலக சமாதானத்திற்காய்
அவர்களும்—
கைச்சாத்திட்டுக் கொண்டார்கள்
ஆனால் பாவம்—
இந்தத் தேசம்
மீண்டும்... மீண்டும்
தீக்குளித்துக் கொண்டிருக்கிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசங்களை எதிர்பார்த்து..!



நேசங்களை எதிர்பார்த்து
ஒரு தேசம்—
கிழிந்து கிடந்தது.

இத்தனை காலம்
நிர்வாணமாய்க் கிடந்த
எங்கள் பூமியும்
குருதிப்பூக்களை உடுத்திக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறப்புகள்தான்
இவர்கள்
ஒரு சட்டைக்காய்—
சண்டையிட்டுக்கொண்டார்கள்.
அதற்குள்தான்—
அந்நியர்களின் ஆக்கிரமிப்பும்
நடந்து முடிந்தது.

காற்றும் ஒளிந்து கொண்டது
இயந்தில் பறவையின்
சீற்றம் கண்டு.

நேசங்களை எதிர்பார்த்து
ஒரு தேசம்
கிழிந்து கிடந்தது.

குருக்ஷேத்திரப் போரில்
கண்ணனும்
வில்லெடுத்துக் கொடுத்தான்
பகவத்கீதை
தேர்க்காலில் இறந்து கிடந்தது.

உடன்பிறப்புகள் நாம்
நமக்குள் நாமே
சண்டையிட்டதுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியும்
தனக்குத்தானே
விலங்கிட்டுக்கொண்டாள்.


இந்தத் தேசத்தின்
மீட்பர் யார்?

நேசங்களை எதிர்பார்த்து
ஒரு தேசம்
கிழிந்து கிடந்தது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு சூரிய தரிசனத்திற்காக..!



மணமகள் தேவை!
விளம்பரமும்
புரட்டிப் பார்த்து
அப்பாவும் அலுத்துக்கொண்டார்.

புரோக்கர் மாமாவிற்கு
தேநீரும்-பீடாவும்
கொடுத்தே காசைக் கரைத்துப்
பார்த்தாள்
அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனியன் நீ இருக்கும் வரை—
என் காதலும் சரிவராது—
என்று நச்சரிக்கும் தங்கை.

உன்னைக் காரணம் காட்டியே
எனக்கு
ஸ்கூல்பீஸ் தருவதை வீட்டில்
மறுத்துவிடுகிறார்கள் என்று
எச்சரிக்கை விடுகின்ற தம்பி

நான் சோறுபோடும் காக்காவும்
அக்காவும் ஒன்று..கெக்கே..
என்று கடைக்குட்டி ரானுவும்
சின்ன மழலையால் என்னைச்
சிறுமைப்படுத்துவது எத்தனை
நாளைக்கு.

இருளைக் கொன்று வெளிச்சம் வரும்
இது நியதி எனில்—
என் கருமை—
செவ்வாய்த் தோஷம்
போய்—
எனக்கான சுயம்வரம்தான்
நடப்பதெப்போ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் காட்டும் கண்ணாடிகூட
ஒருநாள்
சலித்துக்கொண்டது..எப்பத்தான்
நீ
ஜோடியாய் என்னைப் பார்க்கப்
போகிறாய்?

சபதங்கள் எடுத்துக்கொள்ள
நானும் மங்கம்மாவல்ல...
எனினும்—
வாசல் கதவை எத்தனை நாளைக்குத்
திறந்துவைத்திருப்பது...ஒரு
சூரிய தரிசனத்திற்கு.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள்



நாங்கள் சீதைகள்
இராமனின் முன்னாலேயே
அவர்களினால்
கற்பழிக்கப்பட்டவர்கள்
எனினும் —
நாங்கள் சீதைகள்
பிறகு —
இராமனையே தீயில் எரித்துவிட்டதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீக்குளிக்கச் செல்ல—
இராமனுக்கு சந்தர்ப்பமே
கிடைக்கவில்லை.

நாங்கள் கண்ணகிகள்
கோவலன் கேட்கவில்லை
அவர்களே எடுத்துக்கொண்டார்கள்
காற்சிலம்பையல்ல.
அந்த மன்னர்கள்
சிலம்பைப்போல்
உடைத்துத்தான் பார்த்தார்கள்
சிதறிப்போனது இதயத்துடன்
கற்பும்தான்.

எனினும்
நாங்கள் கண்ணகிகள்
கோவலன்
கேட்பதற்கு
இனி எதுவுமேயில்லை எங்களிடம்.

நாங்கள் அகலிகைகள்
அவர்களின் பூட்ஸ்களின்
கால்பட்டுக் கால்பட்டுக்
கல்லாகிப்போன அகலிகைகள்
வந்த இராமர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விலங்குகளுடன் முடமாய்...
எத்தனை காலம் தான்
இப்படி.. இப்படி...

அவர்களின் உறுமல்களுக்கு—
அடி உதைகளுக்கு—
கொடுமைகளுக்கு—
ஆளாகி...ஆளாகி..
உள்ளாகி...இராமர்களுக்காய்க்
காத்திருக்கின்ற
நாங்களும் அகலிகைகளே!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்களுக்கு



இது
எங்கள் தேசம்,
சுரண்டாதீர்கள்
நாளை —
இந்த மண்ணில்தான்
புதைய வேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத்
தோட்டத்தின் பூக்களை
மலரவிடுங்கள்..,
நாளை
உங்களுக்கான
மலர்வளையமுமாகலாம்.

வீட்டின் கதவைச்
சற்றே—
திறந்துவையுங்கள்
வீசும் வசந்தம்
உள்ளேயும்
வீசட்டும்
மனத்தைச் சொன்னேன்.

இனியாவது நண்பர்களே
மனிதர்களை—
இனம் காணவிடுங்கள்
மக்கள்—
இனியாவது வாழட்டும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழனுக்கு



தோழனே
உன்னையே
மகாத்மா என்பேன்
உலக ஏழைக்காக
அழுகின்ற
உனது இதயத்திடம்
என்தலை தாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை
மறந்தாய்
இளமையைத் தொலைத்து
விதவையாக்கிவிட்ட
அவளுக்குப்
பூச்சூட்டி
அழகு பார்த்தாய்.
கைகுலுக்கி
அவளையே
சேர்த்துக்கொண்டதனால்
தியாகி என்பேன்.

இன்றுமுதல்
என்பேனா
தன்னை மூடிக்கொள்ளும்.
தோழனே
சோம்பல் விலக்கி
உன்னுடன்
நானும் —
சேர்ந்துகொள்வேன்.

போர்க்களத்தைப் போய்ப்பார்
எங்கள்
வாட்கள் துருப்பிடிக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெரியும்.
இங்கு—
இன்னும் தணல்கள்.
சாம்பலை நீக்கிப்பார்.
வெக்கை உணர்த்தும்
காத்திருந்தோம்
ஒரு காலத்தின் ஆணுக்காக.

உங்களுக்குப் புரியும்
எங்களின்
பெருமூச்சின் வெக்கை
எங்களின் சுதந்திரம்
தூக்குமரக் கயிற்றில்
நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.
எந்தப்—
புல்லாங்குழலும்
எதிரிகளைப் பணியவைக்காது
ஆதலினால்—
கண்ணனும் வில்லெடுத்தான்.

அந்த எரியும்
தீபங்களை
அணைத்து விடாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
மெழுகுவர்த்தியின் கண்ணீர்
காயப்பட்ட நெஞ்சின்
கதை சொல்லும்.

ஓராயிரம்
மெழுகுவர்த்திகளின்
வெளிச்சங்கள்
ஒரு
கலங்கரை விளக்கத்தை
உருவாக்கட்டும்.
நமக்குத்
தேவைப்படுவது
விளக்குகள் அல்ல...

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் சீதைகளாக



பூச்சூடும் கூந்தல்கூட
ஒருநாள்—
பூவை நிராகரிக்கும்
ஊற்றெடுக்கும் கண்ணீர்
விழிகளைத் துணைக்கழைத்து—
மாநாடு—
நடத்திப் பார்க்கும்
எதற்காய் இந்தப் போராட்டம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவன் —
இராமன் என்றான்.
அம்மா தந்த பலகாரம்
ருசி பார்க்கத் தெரிந்தவர்களுக்குப்
பெண்ணைப் பிடிக்கவில்லையாமோ?
அப்பாவுடன் பேரம் பேசிய
அவர்களும் —
''போய்க் கடிதம் போடுகிறோம்''
எழுந்து கொண்டார்கள்.

ஏன் இப்படி?
ஏழைகள்-பெண்கள்
விற்பனைப் பொருள்களா என்ன?
இங்கே —
சந்தைப் பொருள்களானோம்
பேரம் நடக்கிறது
விற்பனைதான் ஆகவில்லை.

''பெண் சீதா மாதிரி''
இவள் —
வந்தவன் கனவில் ராதா!
அப்படியெனில் —
வந்தவன் இராமனா என்ன?
ஒரு நாளல்ல.
நூறு நாள் படமல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் —
பெண்பார்க்கும் படலம்

வந்தவன் —
இராமனாக இல்லை
இராவணனாக இருந்தால்போதும்
அதுதான் இல்லை
துச்சாதனன்மாதிரியல்லவா
பார்வைகளை எறிகிறார்கள்

இனியாவது
இராமனை நினைத்தது போதும்
எங்களின் சுயவரங்களை
நாங்களே நடாத்துவோம்
வில்லுகள் —
நமக்காய் வளைந்து கொடுக்கும்
சீதைகளே
ஒன்று சேருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பே



உனது
சின்னச் சின்ன
புன்னகையால்தான்
என்
சிந்தனைக்குத் தீ மூட்டினாய்

வாலிபக் காட்டில்
உருண்டோடிய
இதயத்தை
நிறுத்தி
என்னைப் பக்குவப்படுத்தினாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் ஒருவனென்று
உன்னில்
பதிவு செய்து கொண்டாய்
இப்போதெல்லாம்
நந்தவனத்துப் பூக்கள்
கண்ணனுக்குத் தெரிவதில்லை
சூரியகாந்தியாய் நீ
மலர்ந்து விட்டதனால்
உனது சிரிப்பில்—
ஒரு சூரிய வெளிச்சம்
பிரகாசிப்பதனால்
பொய்கள் பொசுங்கிப்போய்—
நிஜங்களைத்—
தரிசனத்துக்கு வரவழைக்கிறாய்
உன்னைப் பார்த்தபிறகு
மரணவலிகூடத் தெரிவதில்லை
இது—
எப்படிச் சாத்யமாயிற்று?
அன்பே—
எனக்கு ஒன்று மட்டும்
இன்னும்
புரியவேயில்லை
''வாழ்க்கை ஏன்
இப்படிச் சிக்கலாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவிற்கு



காணாமலேயே போய்விட்ட
என்னைப் போல
எத்தனை பேர்கள்...
உன்னைப் போலவே
பிள்ளைகளை...
இழந்தபடி... இழந்தபடி...

92146
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை இரவுகளை
நீ—
அழுதே தீர்த்திருப்பாய்

மௌனமாய்த் தானிருந்தோம்
எங்களைத்—
தீக்கோழிகளாக்கி விட்டார்கள்

இழந்தோமே—
கல்வி, தொழில்
நண்பர்கள், ஆத்மாக்கள்
கூடவே மண்ணும்

இந்தக் காட்டில் பார்
ஆண்களுடன்
பெண்கள்
இங்கே யாவரும்
''காம்ரேட்ஸ்'' தான்

எங்களின்
சிலுவைகள்
இறக்கப்படும்வரை
நாங்கள்கூட
அரை நிர்வாண ஏசுக்கள்தான்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பயங்கரவாதிகளல்ல
இந்த
மண்ணில் பூத்த
ரத்த புஷ்பங்கள்

நாங்கள்
ரோஜா மலர்கள்தான்
எனினும்
காட்டுமலர்களானோம்.
இதோ பார் அம்மா
இந்தக்
காட்டுமலர்கள்கூட
எவ்வளவு
சுதந்திரமாய் மலர்கின்றன

ஒருவேளை—
கொள்ளி வைக்க
நான்
வராமலும் போகலாம்
நிறையவே—
கடமைகள் காத்திருக்கின்றன.
நாட்டின் பிள்ளைகள்
உனக்காய்
அணிவகுத்து வருவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் போல்
அம்மாக்களின்
கண்ணீர்களினால்
மாவலிகூட
ஒருநாள்
தன் கடமையை நிறுத்தி
தனது
அஞ்சலியைச் செலுத்திக்கொள்ளும்

எதிர்காலத்திற்கென
சுதந்திர விதைகளைத்
தூவிச் செல்லும்
விடுதலைப் பறவைகளின்
பெயர்கள்
என்றும் பதிவு செய்யப்படும்
அம்மா—

உன்னைப் போல்தான்
எங்கள் மண்ணும்
அடிமைப்பட்டு...
விலங்குடன் பார்
முன்பெல்லாம் சொல்வாய்
அப்பாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுபிடிகளிலிருந்து
எப்போது விடுதலை?
உன் பிள்ளைக்கும்
அதுதான் கவலை
"மண்ணிற்கு
விடுதலை எப்போது?"

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்



கூட்டத்தை விலக்கிப் பார்த்தேன்
குழந்தைப் பூ குருதியில்
இறந்து கிடந்தது
ஊரடங்கு அமுலில் இருந்தபோது—
துப்பாக்கிக்கு
ஈரமில்லையே... அதனால்
வாழைக் குருத்து
குருதி கொப்பளித்து
சரிந்து கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் தமிழர்கள்



நினைவுக்கு வருகிறதா?
இழுத்து வந்து
பார்த்துக் கொள்
மறைந்து நீ போகலாம்
வருடங்கள் அவை
சூத்திரங்கள்
காலங்கள் அவை
பாடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் —
எரித்ததும் வெட்டியதும்
சட்டத்தில் சாதகமானது
எங்களது
அணிவகுப்பில்
ஓர் அணியாய்
ஒன்றுபட்டதில்...
அவர்களின் தடுமாற்றம்
நினைவுக்கு வருகிறதா?
இழுத்துவந்து —
பார்த்துக் கொள்
மறந்து நீ போகலாம்

தெருவினில் இறங்கும் போதும்
வீடுகளில் உறங்கும் போதும்
தெய்வத்திடம்
வணக்கம் செலுத்தும் போதும்
நீ இறந்து போகலாம்
எனினும் —
ஒரு யுகத்தின் சபதத்தை
அவர்களால்
இனிமேலும்
மறந்திடல் முடியாது
மறந்திடல் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் குருவியும் நானும்



மீண்டும்
திண்ணையில்
அதே குருவி
வந்தமர்ந்தது
என்னைப் போலவே
அதற்கும்
சந்தேகம்
இவன் அவனா?
ஒரே ஆளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி சாத்தியமாகும்
நேற்று வந்த
அந்தக் குருவி
இன்றும் வந்தமர்ந்தது
ரகசியம் தான் என்ன?
பழகிப் போனதாலா?

திண்ணையின் சுகம்
எனக்குத் தூக்கம் தருமே
அது மாதிரி...
தென்றல் மோதும் தெருவின்
முகப்பில்—
திண்ணையும் சந்திப்பதால்
ஏற்பட்ட நெருக்கமா?
குருவிக்கும் எனக்கும்
என்ன பிணைப்பு.. நெருக்கம்

நான்கு பார்வைகள்
மோதும்... மீளும்...
காற்றும்—
இருவர் சோகங்களையும்
பரிவர்த்தனை
செய்து பார்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை —
மீண்டும் அந்தக் குருவி
திண்ணையில் வந்தமருமா?
சோகங்களை இதே மாதிரி
கோடிட்டுக் காட்டுமா?

வாழ்க்கையை நேசிக்கத் தெரிந்த
குருவி மாதிரி —
தற்கொலையிலிருந்து நினைவைக்
கொலை செய்துவிட்டு
அந்த —
அதேகுருவியை நாளையும்
தோழமையுடன் —
எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்
இன்னும்
சொல்ல மறந்து சில சோகங்களுடன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகள் மண்ணைத் தொடும்



ஒன்றாய்—
பின் ஒன்றாய்
நீ கழற்றும் போது
நான் என்ன முனிவனா?
தோற்றுத்தான் போனேன்.

காதலின் வைரத்தை
உரைத்துப் பார் என்றாய்
மறந்துபோய்—
உடைத்துப் பார்த்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தது
சிதறியது இதயமல்லவா?

யார் சொன்னது—
இது ஆராய்ச்சிமணி என்று?
காதல்கோயில் மணியல்லவா
ஒலித்தது இங்கு.
என்னிடம்
ஒரு பாரதிராஜா தோற்றுப் போனான்
போங்கள்.

காலம் தன்னைக் கிழித்துச் சென்றது
இப்போது—
அவள் என்னுடன் இல்லை.
உயிரே நீ என்பதன் அர்த்தம்புரிய
இத்தனை
நாட்களாயிற்றோ..?

விழுதுகள்
மண்ணைத் தொடும் போது—
சுமைகள் தெரிவதில்லை
அவள் இறந்த காலமாக...
இலையுதிர் காலத்துப் பூக்களாய்
நிகழ்காலம் அமைய—
நானோ தனி வழியில்...!

PUBLIC LIBRARY
JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதற்கு..?



எதற்கு
இன்னொரு அறைகூவல்?
ஏற்கெனவே
சரணடைந்தபின்.
தினசரி
காணாமல் போகின்ற
என்னிடத்தில்
எப்படி உன்னால் முடிந்தது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடத்தப்பட்ட
எனது சோகங்களும்,
விலங்கிடப்பட்ட
எனது கைகளும்,
எனது மண்ணைப் போல
விடுதலைக்கு
எதிர்பார்த்துக் காத்திருக்கிறது
எதற்கு
இன்னொரு அறைகூவல்
ஏற்கெனவே
சரணடைந்தபின்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூம்பனி மலர்கள்



நீங்கள் அப்படிப்
பனியில்
குளித்து எழுந்தால் மட்டும்
உங்களின்
உணர்ச்சிகள் கறைப்படுகிறதா என்ன?
தினசரி
நானும் தான் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள் நானும்
கேட்டுப் பார்த்துவிட்டேன்
''ஏன் இந்தக் குளியல்''
புரிந்தது
அங்கே என்முன்னே
தீக்குளித்துக் கொண்டிருக்கும்
பூம்பனி மலர்கள்-நமது
பெண்களைப் போல...!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதையாய்



இந்தச்
சிறையை உடைத்துக் கொள்
வாசல் தெரியும்
இராமன் சொன்னான்
வந்தால்
கர்ப்பத்தில் சந்தேகம்
கொள்ள —
தீக்குளிக்கச் சொல்வாய்
ஆதலினால் அன்பரே
இந்தச் சிறையே போதும்
சீதையாய் நான் இருந்து கொள்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை உயரும் அறுவடைக் கரங்கள்



தோளில் போடு
சுமைகள் அழுத்தும்
கனவில் தானே
தோள்கள் சுமக்கும்
வலிகள் அணைக்கும்
வடுக்கள் வரும்போதும்
இரத்தம் சிந்தும்... மறையும்
பயிர்கள் செழிக்கும்
கனவுகள் விதைக்கும்
அறுவடைக் கரங்கள்
நாளை உயரும்! நிமிரும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளில்..



இந்த ஜன்னல் கவிதைகளைக்
காலை மாலைப் பத்திரிக்கைக்காய்
நாங்கள் எழுதுகிறோம்
வாசகங்கள்
எங்கள் வீதிகளில் ஏராளம்
வருவர்... போவர்...
பொழிப்புரை எழுதத் தெரியாது
எங்கள் கருத்தும்—
அவர்களை அடைந்து கொள்ள
இரும்புச் சிறைகள்
தடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே அப்பா சீறுவார்
அம்மா உதைப்பாள்
''அங்கே என்ன விடுப்பு
பார்க்கின்றாய்?''
இதயம் வெடிக்கும்
மாவலி தினசரி கண்ணில் வரும்
இவர்களுடன் அவர்களும்
பார்வையாளர்கள் ஆக...
கவிதைகளும் கசங்கிப் போகும்
''வெளியே வா! விடை கிடைக்கும்''
என்று—
வெளியில் வர வீதி நெருப்பு
சுடுமாம்...
உடலே உள்ளே எரிகிறபோது—
வீதி நெருப்பு எம்மாத்திரம்.?
மீண்டும்—
இவர்களுடன் அவர்களும்
''அவள் குடும்பத்திற்கு
சரிவரமாட்டாள்''
சபித்துச் சொல்ல-நாங்களும்
பாவப்பட்ட ஜென்மங்களானோம்!

92149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம்



எனக்கு
நூல்கள்
விலைமகளிர் மாதிரி!
தழுவிக் கொள்வேன்
அவைகளே அம்மா மாதிரி
வணங்கிச் செல்வேன்
சில சமயம்—
தலைமாட்டில் வைத்துக் கொள்ளல்
தவிர்க்க முடியாததுதான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

எனினும்...
சில குழந்தைகளின் மலம்
துடைக்கக்
கிழிக்கும் போதுதான்
இதயமும்
கிழிபட்டுப் போகிறது
என்னுள் ஒரு
சூரிய உதயத்தையே
தந்ததல்லவா அவைகள்!

92149

★

2617 C.C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org